# தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவு இரகசிய கூட்டத்திலும் முடிவின்றி இழுபறிநிலை!

## முதலில் பதவி வகிப்பது யார் என்பதில் போட்டியாம்!





இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவு தொடர்பில் தீர்மானம் எட்டுவதற்காக வவுனியாவில் இடம்பெற்ற இரகசிய கலந்துரையாடலும் முடிவின்றி நிறைவடைந்துள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கான சர்ச்சைக்குத் தீர்வு காணும் முகமாக தற்போதைய பதில் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம் தலைமையில் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதில் தமிழரசுக் கட்சியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மற்றும் செயலாளர் பதவிக்கு போட்டியிட்ட ச.குகதாசன், ஞா.சிறிநேசன், கோடீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது திருகோணமலையைச் சேர்ந்த குகதாசனும், மட்டக்களப்பைச் சேர்ந்த சிறிநேசனும் பொதுச் செயலாளர் பதவியை ஒவ்வொரு வருடமாக பகிர்ந்து கொள்வது தொடர்பில் பேசப்பட்டு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel



சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2055 தை 28 திங்கட்கிழமை 12.02.2024 கதிர் 179

# சிறுவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் 11,414 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவர்

சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் சித்திரவதை உட்பட இன்னும் பல குற்றங்கள் தொடர்பில் கடந்த வருடம் (2023) பதினோராயிரத்து நானூற்று பதினான்கு (11,414) முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

மின்னஞ்சல்கள், சிறுவர் உதவி தொலைபேசி இலக்கம் 1929, ஜனாதிபதி செயலகம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆகியவற்றின் ஊடாக இது தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுளளார்.

இதற்கமைய, சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 2242 முறைப்பாடுகள், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக 472 முறைப்பாடுகள், பாரிய



சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக 404 முறைப்பாடுகள், சிறுவர்களை விலைபேசி

2 ➤

# கைப்பிடி அளவிற்கு மாறிய நெல் கையிருப்பின் அளவு!

தேசிய கணக்காய்வு திணைக்களத்தின் அறிக்கையின்படி, நெல் சந்தைப்படுத்தல் சபையானது 7 மாகாணங்களில் 327,285 மெற்றிக் தொன் நெல் கொள்ளளவைக் கொண்ட 356 களஞ்சியசாலைகளை கொண்டிருந்த போதிலும் கடந்த

2 ➤

# சப்ரகமுவ பல்கலையில் தாக்குதல் 7 மாணவர்கள் அதிரடியாகக் கைது

## காயமடைந்த மூவர் வைத்தியசாலையில்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் விவசாய பிரிவில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்று வந்த மூன்று மாணவர்களைத் தாக்கிய குற்றச்சாட்டில் அதே பல்கலைக் கழகத்தின் 7 மாணவர்களைக் கைது செய்துள்ளதாக சமனலவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 9 ஆம் திகதி இரவு வெளியில் இருந்து உணவை எடுத்து வந்து பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலையில் இரவு உணவு உட்கொண்டு இருந்த சந்தர்ப்பத்திலேயே வேறு சில

2 ➤

# மின்கட்டண அதிகரிப்பு காரணமாக வருமானம் இரு மடங்காக அதிகரிப்பு

மின்கட்டண அதிகரிப்பு காரணமாக கடந்த வருடம் (2023) முதல் எட்டு மாதங்களில் மின்சார விற்பனை மூலம் இலங்கை மின்சார சபைக்கு கிடைத்த வருமானம் 402 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக நிதிய மைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அரச நிதி முகாமைத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் மின்சார விற்பனை மூலம் கிடைத்த வருமானம் 172 பில்லியன் ரூபாவாகும். அந்த தொகையுடன் ஒப்பிடும்போது கடந்த ஆண்டின் (2023) முதல் எட்டு மாதங்களில் ஈட்டப்பட்ட வருமானம் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரச நிர்வாக சேவை 3 ஆம் தரத்திற்கு10 வருடங்களாக ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை நடைபெறவில்லையாம்!

## சங்கத்தின் செயலாளர் அமில பண்டார தெரிவிப்பு

இலங்கை நிர்வாக சேவையின்3 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை பத்து வருடங்களாக நடைபெறவில்லை என அரச மாகாண பொது முகாமைத்துவ சேவை அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் அமில பண்டார தெரிவித்துள்ளார்.

கடைசியாக கடந்த 2013 ஆம் ஆண்டிலேயே போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். போட்டிப் பரீட்சை குறித்து நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இந்த தரத்திற்கு ஆட்சேர்ப்பு நடைபெறவில்லை எனவும் கடைசியாக கடந்த 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் 12 பேர்

2 ➤

## தமிழக சினிமாக் கலைஞர் நிகழ்வுகள் தொடர்பில்

# யாழ். தலைமைகள் கலந்துபேசி பொது முடிவு எடுக்க வேண்டும்!

## முற்றவெளி சம்பவம் தொடர்பில் மனோ கணேசன் கருத்து



“யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தமிழக சினிமா கலைஞர் நிகழ்வுகள் தொடர்பில் யாழ். மாவட்ட எம்.பிக்கள், மாவட்ட செயலாளர், பொலிஸார், யாழ். மாநகர சபையினர், சிவில் சமூகத்தினர் ஆகியோர் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கூடி அமர்ந்து பேசி தீர்மானிக்க வேண்டும்.” - என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழக சினிமா கலைஞர்களின் கலை நிகழ்வில் நடந்த துரதிஷ்ட சம்பவங்கள், இலங்கை - தமிழக கலாசார உறவுகளுக்கு பாதகமாக அமைந்து விடக் கூடாது. இப்படியான பிரமாண்டமான கலை நிகழ்வுகள் நடத்தப்படும் போது, அவற்றுக்கான விதிமுறைகள் நடைமுறைக்கு வர வேண்டும். தமிழக சினிமா ஒரு பிரமாண்டமான

2 ➤

# புதன்கிழமை தாதியர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

தாதியர்களின் ஊதியப் சம்பளப் பிரச்சினைகள் உட்பட பிரச்சினைகள் தொடர்பில் தீர்வுகள் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அகில இலங்கை தாதியர் சங்கத்தைச் சேர்ந்த தாதியர்கள் எதிர்வரும் புதன்கிழமை (14ஆம் திகதி) கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு எதிரே பாரிய ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தாதியர்கள் மற்றும் இதர தாதியர்கள் என பெருந்தொகையானோர் ஒன்று திரண்டு தேசிய மருத்துவமனையை முற்றுகையிட்டு மேற்படி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அதன் ஏற்பாட்டாளர் எஸ். மெதிவத்த தெரிவித்துள்ளார். (ரெப-22)

# பெரியநீலாவணையில் ஆணொருவரின் சடலம்

அம்பாறை மாவட்டம், பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு கடற்கரையில் ஆண் ஒருவர் இன்று சடலமாக மீட்கப்பட்டார்.

மேற்படி நபர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர் என்று சடலத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 50 அல்லது 55 வயதுக்கு உட்பட்டவராக இருக்க முடியும் என்று பொலிஸார் கூறினர்.உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்(அ)

## தமிழரசுக் கட்சியின்.....

எனினும் முதலில் யார் ஒரு வருடம் பதவி வகிப்பது என்பது தொடர்பில் இருவருக்கும் இடையில் இணக்கப்பாடு இன்றி முரண்பாடுகள் ஏற்பட்டு முடிவுகள் எட்டப்படாத நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பாட்டுள்ளது.

இந்த நிலையில், இருவரும் இரண்டு நாட்களுக்குள் முடிவினை அறிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டு இரகசியக் கலந்துரையாடல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள் ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சிறுவர்கள் முகம் கொடுக்கும்.....

விற்றல் தொடர்பாக 32 முறைப்பாடுகள், சிறுவர்களை யாசகத்தில் ஈடுபடுத்துவது தொடர்பாக 323 முறைப்பாடுகள், சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்பாமை தொடர்பாக 1929 முறைப்பாடுகள், சிறுவர்களை தொழிலாளர்களாக பணிக்கமர்த்தல் தொடர்பாக 181 முறைப்பாடுகள், சிறுவர்களை கவனிப்பாரற்று விட்டமை தொடர்பாக 2942 முறைப்பாடுகள், சிறுவர்களிடம் பாலியல் நலன்களை அடைந்தமை தொடர்பாக 8 முறைப்பாடுகள், ஆபாசமான பிரசுரங்களுக்கு சிறுவர்களை பயன்படுத்தியமை தொடர்பாக 6 முறைப்பாடுகள் என ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் (2023) நாட்டின் 25 மாவட்டங்களிலிருந்தும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு இந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இதில் மேல் மாகாணத்திலிருந்தே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்கள் மீது ஏதேனும் துஷ்பிரயோகம் அல்லது சித்திரைவதைகள் நடைபெற்றால் அது குறித்து 1929 என்ற சிறுவர் உதவி இலக்கத்தில் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு சிறுவர்கள் மற்றும் பெரியவர்களிடம் அதிகார சபையின் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ரெப-26)

## கைப்பிடி அளவிற்கு.....

வருடம் (2023) ஜூலை 26 ஆம் திகதி வரை இந்தக் களஞ்சியசாலைகளில் 7511 மெற்றிக் தொன் நெல் மாத்திரமே காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஏழு மாகாணங்களில் சேமிப்புத் திறனில் 2.3 வீதமே பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் கணக்காய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. இத்தகைய நிலையிலும், கடந்த வருடம் (2022) நெல் சந்தைப்படுத்தல் சபையின் 136 ஊழியர்களுக்கு சம்பளமாக ஒரு கோடியே ஐம்பது லட்சத்து பத்தொன்பதாயிரத்து இருநூற்று முப்பது ரூபா (105,019,230) வழங்கப்பட்டுள்ளதாகவும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகளிடமிருந்து உத்தரவாத விலையில் கொள்வனவு செய்வதன் மூலம் விவசாயிகளின் வறுமையைக் குறைப்பதும், பாதுகாப்பான இருப்பை தக்க வைத்து நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதுமே நெல் சந்தைப்படுத்தல் சபையின் முதன்மையான நோக்கம் என கூறப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (ரெப-24)

## அரச நிர்வாக சேவை.....

இணைத்துக் கொள்ளப்பட்டதாகவும் அமில பண்டார தெரிவித்துள்ளார்.

அரச நிர்வாக சேவையின் 3 ஆம் தரத்தில் 42 வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் மேற்படி போட்டிப் பரீட்சை நடாத்தப்படாமையின் காரணமாக தகுதி வாய்ந்த அரச அதிகாரிகள் பலர் பதவி உயர்வு பெறாமலேயே ஓய்வுபெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரெப-23)

## யாழ். தலைமைகள்.....

பணம் கொழிக்கும் வியாபாரம். அங்கே யாரும் கலை சேவை செய்யவில்லை. அது ஒரு பணம் புழங்கும் தொழில் என்பதால்தான், இன்று சினிமா பெரும் வளர்ச்சி அடைந்த தொழிலாகி உள்ளது. அதனால்தான் பல புலம் பெயர்ந்த இலங்கை தமிழர்களே அதில் இருக்கிறார்கள். அதேவேளை, வடக்கில், 'இது போர் நிகழ்ந்த பூமி, துன்பம் நிறைந்த பூமி, இங்கே ஆடல், பாடல், கச்சேரி வேண்டாம். அப்படியே, இருந்தாலும் அவை உரிமை கோஷங்களாக மட்டுமே இருக்க வேண்டும்' என்ற ஒரு சிந்தனை நிலைப்பாடும் இருக்கிறது. இவை அனைத்தையும் கணக்கில் எடுத்து, யாழ். மாவட்ட எம்.பிக்கள், மாவட்ட செயலாளர், பொலிஸார், யாழ். மாநகர சபையினர், சிவில் சமூகத்தினர் ஆகியோர் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கூடி அமர்ந்து பேசி தீர்மானிக்க வேண்டும். சினிமா கலைஞர்கள் அழைத்தால் வருவார்கள். வேண்டாம் என்றால் வர மாட்டார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடந்த தமிழக சினிமா கலைஞர்களின் கலை நிகழ்வில் நடந்த துரதிஷ்ட சம்பவங்களைக் கடந்து போக வேண்டும்.

இதை விட இசை நிகழ்வு கலவர பூமியாக மாறி, பலர் கொலையுண்ட சம்பவம் கொழும்பில், 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நிகழ்ந்தது. பொலிவுட் நடிகர் ஷாருக் கான் கலை நிகழ்ச்சி நடத்த கொழும்பு வந்த போது, குண்டு வீசப்பட்டது. நடிகர் ஷாருக் அப்படியே திருப்பிக்கொண்டு விமான நிலையம் போனவர்தான். இன்று, அவரது உலக வரைபடத்தில் இலங்கை இல்லையாம்.

அந்த வெடிப்பில், எனது சில நண்பர்கள் உட்பட, பல இரசிகர்கள் இறந்தார்கள். பிரபல சோம தேரரின் நினைவு தினமன்று இந்தக் கலை நிகழ்ச்சி நடத்த ஏற்பாடாகி இருந்ததால், அந்த நிகழ்வை சிங்கள – பௌத்த தீவிர அமைப்பினர் எதிர்த்துப் போராடியதால், ஒரு பதற்ற நிலைமை அன்று நிலவியது. அதையடுத்து, இத்தகைய கலை நிகழ்வுகள் தொடர்பில், பல விதிமுறைகள் அமுலுக்கு வந்துள்ளன.

சினிமா ஒரு தொழில். அங்கே யாரும் கலை சேவை செய்யவில்லை. அது ஒரு பணம் புழங்கும் தொழில் என்பதால்தான், இன்று சினிமா பெரும் வளர்ச்சி அடைந்த தொழிலாகி உள்ளது. பணம் கொடுத்தால், சகாரா பாலைவனத்திலும் அவர்கள் ஆடல், பாடல், இசை நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். சினிமா, பணம் கொழிக்கும் வியாபாரம் என்பதால்தான் பல புலம் பெயர்ந்த இலங்கை தமிழர்களே அதில் இருக்கிறார்கள். கலைஞர்களை அழைத்தால் வருவார்கள். வர வேண்டாம் என்றால் வர மாட்டார்கள். இலங்கை வந்து செல்வது என்பது மிகப்பெரும் பணம் கொழிக்கும் முன்னணி வருவாய் இல்லை. பக்கத்தில் இருக்கும் நாடு என்பதால், சடுதியாக வந்து விட்டு, ஆடி, பாடி, நிகழ்வு நடத்தி போகலாம் என்று வருகின்றார்கள்.

இனி யாழ். மாவட்ட எம்.பிக்கள், மாவட்ட செயலாளர், பொலிஸார், யாழ். மாநகர சபையினர், சிவில் சமூகத்தினர் ஆகியோர் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கூடி அமர்ந்து பேசி, இப்படியான நிகழ்வுகளுக்கு விதிமுறைகளை அறிவிக்கலாம். முழுக்க, முழுக்க ஏற்பாட்டாளர்களின் கைகளில் மட்டும் பொறுப்புகளை வழங்கி விட்டு, ஒதுங்கக்கூடாது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்ட எம்.பிக்களுக்கு மக்களின் பாதுகாப்பு தொடர்பில் பொறுப்பும், அதிகாரமும் உண்டு.

இளம் தலைமுறையினர், இசையை கேட்க, நட்சத்திரங்களை பக்கத்தில் போய் பார்க்கத்தான் ஓடி வந்தார்கள். அதற்குள் போதையில் சிலர் இருந்திருக்கலாம். இப்படியான ஒரு தரப்பு இளையோர் எங்கும் உள்ளார்கள். கொழும்பிலும், சென்னையிலும், லண்டனிலும், சிக்காகோவிலும் உள்ளார்கள். முற்றவெளியில், ஒலி அமைப்பு அரங்கத்தின் மீது இளையோர் ஏறி நின்றார்கள். பாரம் தாங்காமல் அந்த அரங்கு உடைந்து போயிருந்தால், பெரும் உயிர் சேதம் ஏற்பட்டு இருக்கலாம்.

இன்று, கொழும்பில் இந்நிகழ்வுகள் நடக்கின்றன. தொடர்ந்தும் நடக்கும். யாரும் வந்து முறைப்படி பார்க்கலாம். அதற்கான கட்டமைப்புகள் இங்கே இருக்கின்றன. கொழும்பைப் போன்று, யாழில் உள்ளக, வெளியக அரங்க கட்டமைப்புகள் இல்லை. கொழும்பிலும், சுகததாச உள்ளக அரங்கில் அதிகபட்சம் ஐயாயிரம் பேர் கூடலாம். இலட்சக்கணக்கில் கூட உள்ளக அரங்கு சரிவராது. வெளியக விளையாட்டரங்குதான் சரி.

யாழில் கலாசார மண்டபத்தை ரூ. 200 கோடி அளவில் முதலிட்டுக் கட்டிக்கொடுத்த இந்திய அரசுக்கு அப்போது, இந்த முற்றவெளியை, கொழும்பு சுகததாச அரங்கம் மாதிரி கட்டிக்கொடுங்கள் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் யோசனை முன்வைத்து கூறி இருக்கலாம். இனியாவது, வெளிநாட்டு அரசுகளோ, புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளோ, இதைச் செய்யலாம். உள்நாட்டில் அடுத்த பல வருடங்களுக்குப் பணம் இல்லை.

அடுத்து, 'இது போர் நிகழ்ந்த பூமி, துன்பம் நிறைந்த பூமி, இங்கே ஆடல், பாடல், கச்சேரி வேண்டாம். அப்படியே, இருந்தாலும் அவை உரிமை கோஷங்களாக மட்டுமே இருக்க வேண்டும்' என்று கூறும் கருத்தும் சமாந்திரமாக இழையோடுகிறது. இது ஒரு தமிழ் தேசிய அரசியல் நிலைப்பாடு. இதை மறைக்க முடியாது. அப்படி இல்லை என்று கூறவும் முடியாது.

ஆகவே, இது தொடர்பிலும், அரசியல்வாதிகள், சிவில் சமூகத்தினர் இடையே கலந்துரையாடல் நடக்க வேண்டும். ஒட்டுமொத்தமாக மக்களின் நிலைப்பாடு இதுவாகத்தான் இருக்குமானால், விடை சுலபமானது. யாழ்ப்பாணத்தில் இனிமேல் தமிழக சினிமா கலைஞர்களை கொண்டு இத்தகைய ஆடல், பாடல், இசை நிகழ்ச்சிகளை நடத்தாமல் விடலாம்.' – என்றார். (அ)

## சப்ரகமுவ பல்கலையில்.....

மாணவர்கள் மின்சாரத்தை துண்டித்து இந்தத் தாக்குதலை நடத்தி தலைமறைவாகி இருந்து நிலையிலேயே மேற்படி மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான இரண்டு மாணவர்களும் ஒரு மாணவியும் தொடர்ந்து பலாங்கொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை சமனலவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நடைமுறைகள் குறித்து யாழ் செயலகம் தகவல்!



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவானது இந்த வருடம் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் ஒருங்கிணைப்பின் கீழ் யாழ் ஆயர் இல்லம், இலங்கை கடற்படை, நெடுந்தீவு பிரதேச செயலகம், மற்றும் சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களினது முழுமையான ஒத்துழைப்புடன் பெப்ரவரி 23 மற்றும் 24 ஆந் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் மேற்டி விடயம் சர்பாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தால் முக்கிய விடயங்கள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2024.02.23 ஆந் திகதி காலை 5 மணி தொடக்கம் மு.ப 10 மணி வரை அரச பேரூந்துகள் மற்றும் தனியார் பேரூந்துகள் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து குறிக்கட்டுவான் வரை சேவையில் ஈடுபடும். கச்சதீவுக்கான படகுச்சேவையானது குறிக்கட்டுவான்,நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்குதுறைகளில் இருந்து 2024.02.23 ம் திகதி காலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

குறிக்கட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்குதுறைகளில் இருந்து பயணிக்கும் ஒரு நபருக்கான படகிற்குரிய ஒரு வழிப் பயணக் கட்டணம் ரூ.1500 ஆகும்.

வெளி மாவட்டங்களிலிருந்து தமது சொந்தப்படகுகளில் திருவிழாவிற்கு செல்வோர் தமது வசிப்பிடங்களிற்கு அருகிலுள்ள கடற்படை முகாம்களில் தொடர்புகொண்டு உரிய கடற்பயணப் பாதுகாப்பு அனுமதியினை பெற்றுக்கொள்வதுடன் படகுகளில் பயணம் செய்பவர்கள் தனித்தனிப் படகாக பயணம் செய்யாது குழுவாக இணைந்து பாதுகாப்பான முறையில் பயணிப்பதுடன் 23 ம் திகதி பிற்பகல் 6 மணிக்கு முன்னதாக கச்சதீவை வந்தடைவதற்கேற்றவாறு தங்களது பயணங்களை ஆரம்பிக்கவேண்டும்.

கச்சதீவு உற்சவத்தில் கலந்து கொள்ளும் யாத்திரிகர்கள் தங்களுக்கு தேவையான உணவு மற்றும் குடிநீர் ஏற்பாடுகளுடன் வருகைதருதல் வேண்டும்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயமானது யாத்திரிகர்களின் புனித தலமாகவுள்ளதால் மது பாவனைப்பொருட்கள் கொண்டு செல்லுதல் மற்றும் பாவித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. (01)

## கடற்கரைப் பிரதேசத்தை தூய்மைப்படுத்தும் நிகழ்வு




(எம் எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை கடற்கரையோரம் துப்புரவு செய்யும் பணி நேற்று (11) அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம் ஏ சி அகமது ஷாபிர் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வானது அம்பாறை கரையோர பாதுகாப்பு திணைக்களம், அட்டாளைச்சேனை பிரதேச சபை, அட்டாளைச் சேனை பிரதேச செயலகம், அக்கரைப் பற்று பொலிஸ் திணைக்களம் அட்டாளைச்சேனை சுகாதார பணிமனை மற்றும் பல நிறுவனங்களின் அனுசரணையுடன் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி எம். இஸ்மாயில், உதவி பிரதேச செயலாளர் திரு மதி முஷாபிர், கணக்காளர் எம் ஏ றிபாஸ், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எல்.மஜித், கிராம நிர்வாக உத்தி யோகத்தர் ஏ எல். ஜௌபர், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ எம். ஹமீட் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து இந்தத் துப்புரவு பணியில் ஈடுபட்டனர்.

## நிர்வாக உத்தியோகத்தர் முஷரப்பிற்கு பிரிவுபசாரம்



(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஐ. முஷரப் தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றதை அடுத்து அங்கு பிரிவுபசார நிகழ்ச்சி நடைபெற்றது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையில் வலயக்கல்விப் பணிமனையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அங்கு நிர்வாக உத்தியோகத்தரின் சேவைகள் பற்றி பலரும் பாராட்டி பேசினர். இறுதியில் அவருக்கு சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனை உத்தி யோகத்தர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசுகளை வழங்கினார்கள்.

இறுதியில் நிருவாக உத்தியோகத்தர் முஷரப் ஏற்புரை வழங்கினார்.



# வாய்வழி புற்றுநோய் OPMD ஸ்கிரீனிங் இலவச நடமாடும் மருத்துவ சேவை!



(எம்.எப். நவாஸ்)

உலக பல்வலி தினத்தையொட்டி "வெற்றிலை, புகை பிடித்தலைத் தவிர்த்து வாய்ப்புற்று நோயினைத் தடுப்போம்" எனும் தொனிப் பொருளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குற்பட்ட ஆலையடிவேம்பு கண்ணகிபுர கிராமத்தில் வசித்து வருகின்ற மக்களின் வாய்வழி புற்றுநோய் ஓ.பி.எம்.டி (OPMD) ஸ்கிரீனிங் திட்ட நடமாடும் இலவச பல் வைத்திய சேவையுடன் விழிப்புணர்வு நிகழ்வும் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகிலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைவாக, கல்முனை பிராந்திய பல் வைத்திய அதிகாரி எம்.எச். எம்.சறூகின் தலைமையில் கீழ், ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி திருமதி ஏ.பிரசாந்தினி மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட குழுவினர் இச்சேவையை முன்னெடுத்தனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனைக்குட்பட்ட கிராமங்களில் வாழ்கின்ற மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் அவர்களின் ஆரோக்கிய வாழ்வை உறுதிப்படுத்தும் வகையில் இவ்வாறான இலவச மருத்துவ நடமாடும் சேவைகளையும், பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்வுகளை கடந்த பல வருடங்களாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# புனித மிக்கேல் கல்லூரியின் 116 ஆவது பழைய மாணவர் சங்கக் கூட்டம்!

St. Michael's College Batticaloa
Alumni Association

ANNUAL GENERAL MEETING
(MEMBERS ONLY)

9.00 AM | SUNDAY FEBRUARY 25TH | 2024

BASKETBALL COURT, ST. MICHAEL'S COLLEGE, BATTICALOA

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையின் புகழ் பெற்ற மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர் சங்க தாய்க்கிளையின் 116 ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிருவாக தெரிவும் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

புனித மிக்கேல் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானத்தில், பழைய மாணவர் சங்க தாய்க்கிளையின் தலைவரும் இயேசுசபை துறவியுமான வண.அருட்தந்தை.ரி.சகாயநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கல்லூரியின் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

மட்-புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் (தாய்க்கிளை) செயலாளர் மேற்படி அழைப்பை விடுத்துள்ளார்.




# கல்முனை சுகாதாரப் பணிப்பாளர் சஹிலாவுக்கு சாய்ந்தமருதில் வரவேற்பு



(அஸ்லம் மௌலானா, யூ.கே.காலிதீன்)

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பதவியேற்றுள்ள வைத்திய கலாநிதி சஹிலா இஸ்ஸதீனுக்கு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெற்றது.

வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டொக்டர் ஏ.எல்.எம்.அஜ்வத் தலைமையில் வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் டொக்டர் சனுஸ் காரியப்பர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுகாதார தகவல்கள் பிரி வின் பொறுப்பதிகாரி ஐ.எம்.முஜீப், சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் ஏ.ஹிபத்துல் ஹறீம், வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தின் பிரதித் தலைவர் எம்.எஸ்.எம். முபாறக், செயலாளர் எம்.ஐ.எம். சதாத் உட்பட வைதியசாலையின் ஊழியர்கள் மற்றும் அபிவிருத்திக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சஹிலா இஸ்ஸதீன் நினைவுச் சின்னம் வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாக சுகாதாரப் பணிப பாளருடன் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

# 34 நாட்களில் நீந்திக்கடந்த நெருப்பாறு கரைச்சியில் நாவல் வெளியீட்டு நிகழ்வு



தமிழ்த்தேசியக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் 34 நாட்களில் நீந்திக்கடந்த நெருப்பாறு என்ற நாவல் வெளியீட்டு நிகழ்வு சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

எழுத்தாளர் தீபச்செல்வன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், சிறப்பு விருந்தினராக மகாதேவா ஆசிரமத் தலைவர் சி.மோகனபவன் உள்ளிட்ட எழுத்தாளர்கள், பொது அமைப்பு சார்ந்தோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# கற்பிட்டி அஹதிய்யா பாடசாலைக்கு புதிய மாணவ அனுமதி விண்ணப்பம்

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி அஹதிய்யா பாடசாலைக்கு 2024 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்கள் அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலைகளில் தரம் 3 தொடக்கம் உயர்தரம் வரை கல்வி பயிலவுள்ள மாணவர்கள் கற்பிட்டி அஹதிய்யா பாடசாலைக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும், அஹதிய்யாவின் பரீட்சை மட்டங்களாக பாடசாலை மட்டத்தில் அரையாண்டு மற்றும் இறுதியாண்டு பரீட்சைகள் தரம் 3 தொடக்கம் உயர்தரம் வரையும் தேசிய இடைநிலை சான்றிதழ் பரீட்சை தரம் 9 மாணவர்களுக்கும், தேசிய இறுதிச் சான்றிதழ் பரீட்சை சாதாரண தர மாணவர்களுக்கும், தர்மாச்சாரிய (தீனியாத்) தேசிய மட்ட பரீட்சை உயர்தர மாணவர்களுக்கும் நடாத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காதலர் தினத்தையே இல்லாமல் செய்யும் கட்பரி 5 ஸ்டாரின் - டைம் ட்ராவல் திட்டம்!



உலகமே காதலால் கரைந்துபோகும் பெப்ரவரி 14 ஐ அடியோடு வெறுக்கும் சிங்கிள்களுக்காக கட்பரி 5 ஸ்டார் ஒரு புதிய பிரசாரத்தை இந்த வருடம் முன்னெடுத்துள்ளது. இந்த ஆண்டு பெப்ரவரி 14 ஐ காலப்பயணம் மூலம் காணாமல்போகச் செய்வதே அந்தப் புதிய பிரசாரம்.

எல்லா வருடமும் காதலர் தினத்தன்று 'டூ நத்திங் (Do nothing)' என்ற பிரசாரத்தை புதிய பரிணாமத்தில் முன்னெடுத்துவருகிறது 5 ஸ்டார். கடந்த ஆண்டு காதலர்களால் நிரம்பி வழியாத இடங்களைக் கண்டுபிடிக்கும் செயலி ஒன்றினை வெளியிட்டு அனைவரையும் கவர்ந்தது.

இந்த ஆண்டு அதை விட ஒரு படி! அல்ல, ஒரு மலை தாண்டி, பெப்ரவரி14 எனும் நாளையே டைம் ட்ராவல் மூலம் கடந்துவிடும் பிரசாரத்தை முன்னெடுத்துள்ளது.

மூன்று பேர் இந்த ஆண்டு பெப்.13 ஆம் நாளிலிருந்து பெப்.15 - க்கு பயணிக்கவிருக்கின்றனர். பெப்.14 2024 எனும் நாள், அவர்கள் வாழ்க்கையில் இருக்காது. வரலாறு காணாத இந்த புதிய பிரசாரத்தை கட்பரி 5 ஸ்டார் இந்திய நேரப்படி பெப்.14 மாலை 4 மணிக்கு செய்துகாட்டவிருக்கிறது.

இந்தக் காலப்பயணம் எப்படி சாத்தியம் என்பதை விஞ்ஞானி நம்பி நாராயணன் விளக்கும் காணொலியையும் 5 ஸ்டார் வெளியிட்டுள்ளது.

மூன்றுபேர் இருக்கும் கலனைக் கொண்ட பெரிய கப்பல் ஒன்று அமெரிக்க சமோவா மற்றும் சமோவா கடல் எல்லையைத் தாண்டவிருக்கிறது. சர்வதேச நேரத்தின்படி அமெரிக்க சமோவாவில் பெப்.13 இரவு 11.59 மணிக்கு அந்த எல்லையைத் தாண்டும்போது சமோவாவில் பெப்.15 ஆம் நாள் துவங்கியிருக்கும்.

அதாவது சர்வதேச நேரத்தின்படி 24 மணிநேரம் ஒரு நிமிடத்தில் கடக்கப்படபோகிறது. பெப்.14 எனும் நாள் அந்த மூவருக்கும் சர்வதேச நேரத்தின்படி ஒரு நிமிடம் மட்டுமே!

பெப்.14ஐ சந்திக்காத அந்த மூவரும் 5 ஸ்டார் சாப்பிட்டு, ஒன்றும் செய்யாமல் இருப்பார்கள் (Do nothing) என அந்நிறுவனம் கூறியுள்ளது.

காதலர் தினத்தில் தனிமையில் தவிக்கும் சிங்கிள்களுக்கு ஆதரவு கொடுக்க, ஆறுதல் அளிக்க இந்த காலப்பயணத்தை செய்யவிருக்கிறது கட்பரி 5 ஸ்டார். இந்த நிகழ்வை நேரலையில் பார்ப்பதற்கான வழிவகைகளையும் அந்நிறுவனம் செய்துள்ளது. இந்த ஆண்டு பெப்.14ஐத் தவிர்க்கப்போகும் அந்த மூன்று பேரை மொத்த உலகமும் கண்டுகளிக்கலாம்.

காதலர் தினம் வேண்டாம் எனும் சிங்கிள்கள் எல்லோரும் இந்த சரித்திர நிகழ்வைக் காண ஆவலாக உள்ளனர். மனித சமுதாயத்தின் நீண்ட நாள் ஆசை இது என 5 ஸ்டார் நிறுவனம் கூறியுள்ளது.

# அரசியல் சார்ந்த பதிவுகள் பரிந்துரைக்கப்படாது இன்ஸ்டாகிராம் பயனாளர்களுக்கு அறிவித்தது!

இன்ஸ்டாகிராம் பயனாளர்களிடம் இனி அளவுக்கு அதிகமான அரசியல் பதிவுகள் திணிக்கப்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக இன்ஸ்டாகிராமில், எக்ஸ்ப்ளோர், ரீல்ஸ் ஆகிய வசதிகளில் நாம் பின்தொடராத கணக்குகளிலிருந்து பதிவுகள் தானாக பரிந்துரைக்கப்படும். ரீல்ஸ்களில் நாம் பின்தொடராத கணக்குகளின் பதிவுகள் நமது செயல்பாட்டின் அடிப்படையில் பரிந்துரைக்கப்படும்.

அதாவது, லைக் செய்த பதிவுகள், கொமெண்ட் செய்த பதிவுகளை கருத்தில் கொண்டு அந்த பக்கங்களை நாம் பின்தொடராவிட்டாலும், அந்த பக்கத்தின் பதிவுகள் நமக்கு பரிந்துரைக்கப்படும்.

இந்த வசதியில், அரசியல் சார்ந்த கருத்துக்களைக் கொண்ட பதிவுகள் பரிந்துரைக்கப்படாது என இன்ஸ்டாகிராம் தனது ப்ளொக் பதிவு ஒன்றில் விளக்கியுள்ளது. பெரும்பான்மை மக்கள் கேட்டுக்கொண்டதையடுத்து இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

எனினும், அரசியல் சார்ந்த பக்கங்களை நாம் பின்தொடர்ந்தால் அந்த பக்கங்களின் பதிவுகள் எந்தத் தடையிமின்றி நமக்கு காட்டப்படும் என இன்ஸ்டாகிராம் தெளிபடுத்தியுள்ளது. மேலும், அரசியல் பதிவுகள் பரிந்துரைக்கப்படுவதை விரும்பும் பயனாளர்கள் அதை அனுமதித்துக்கொள்ளும் வசதியும் வழங்கப்படும் என மெட்டாவுக்கு சொந்தமான இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இன்ஸ்டாகிராம் மட்டுமல்லாமல், த்ரெட்ஸ் தளமும் இந்த வழிமுறையைப் பின்பற்றவுள்ளது. பேஸ்புக்கில் விரைவில் இந்த வசதி கொண்டுவரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.








## கிளிநொச்சியில் வியாபார மோசடி கைதானவர்களுக்கு தண்டப்பணம்

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதத்தில் – அதிகூடிய விலைகளில் பொருட்களை விற்பனை செய்தமை, விற்பனைக்காக காட்சிப்படுத்தியமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, விலை மாற்றம் செய்து விற்பனை செய்தமை என பல்வேறு குற்றச்சாட்டுகளிலும் கைது செய்யப்பட்ட 18 பேருக்கு எதிராக ஒரு லட்சத்து 69 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கடந்த ஜனவரி மாதம் நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது, அதிகூடிய விலைகளில் அரிசி உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்ததுடன் காலாவதியான பொருட்களை விற்பனைக்காக காட்சிப்படுத்தியமை மற்றும் பொருட்களின் விலைகளை மாற்றம் செய்து விற்பனை செய்தமை விலை காட்சிப்படுத்தப்படாமல் பொருட்களை விற்பனை செய்தமை என பல்வேறு குற்றச்சாட்டுகளில் 18 பேருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நிதீமன்ற நீதவான் பி.ஆர்.ஐ ஜெமில் முன்னிலையில் அவர்கள் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து தலா பத்தாயிரம் ரூபாய், ஐயாயிரம் ரூபா என ஒரு லட்சத்து 69 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது. (02)

## கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் தவறான முடிவெடுத்து உயிர் மாய்ப்பு

### இடமாற்றம் கிடைக்காத விரக்தி?

யாழ்ப்பாணம் – சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார். குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது டச்சு வீதி மூளாய், சுழிபுரம் பகுதியை சேர்ந்த 49 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில்கடமைபுரிந்துவரும் நிலையில் இவருக்கு இடமாற்றம் கிடைத்துள்ளது.

ஆகையால் இடமாற்றத்தை இரத்துச் செய்வதற்கு முயற்சித்துள்ளார். ஆனால் முயற்சிகள் பலனளிக்கவில்லை.

இந்நிலையில் நேற்றைய தினம் (11) அவரது இல்லத்தில் தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டதுடன் உடற்கூற்று பரிசோ


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
DOWNLOAD DRIVER APP
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!